## April 21, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ராஜஸ்தான் மாநிலம், பலோத்ரா மாவட்டம் பச்பத்ராவில் அமைக்கப்பட்டுள்ள நாட்டின் முதல் புதிய ஒருங்கிணைந்த கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு - பெட்ரோலிய ரசாயன வளாகம் பிரதமர் நரேந்திர மோடியால் செவ்வாய்க்கிழமை (ஏப். 21) நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட இருந்த நிலையில், அந்த வளாகத்தில் தீ விபத்து ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து, திறப்பு விழா ஒத்திவைக்கப்பட்டது.

(i) அந்த வளாகத்தில், கச்சா எண்ணெய்யை காய்ச்சி வடிக்கும் பிரிவில் தீ விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. உடனடியாக, அவசரகால நடவடிக்கை குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

(ii) பிரதமர் வருகையையொட்டி, இந்த வளாகத்தை மாநில முதல்வர் பஜன்லால் சர்மா பார்வையிடவிருந்த நிகழ்வும், இந்த தீ விபத்து காரணமாக ரத்து செய்யப்பட்டது. தீ விபத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து கணக்கிடும் பணி நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(iii) திறப்பு விழா ஒத்திவைப்பு:

- 'தீ விபத்தைத் தொடர்ந்து, அந்த வளாகம் பிரதமரால் செவ்வாய்க்கிழமை (ஏப்.21) திறந்துவைக்கப்பட இருந்த நிகழ்வு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.
- தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. தீ விபத்து தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது' என்று மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டது.
- ரூ.79,450 கோடிக்கும் அதிகமான முதலீட்டில் தொடங்கப்பட உள்ள இந்தப் புதிய ஒருங்கிணைந்த சுத்திகரிப்பு - பெட்ரோலிய ரசாயன வளாகம், இந்திய எரிசக்தி மற்றும் பெட்ரோலிய ரசாயனத் துறையில் குறிப்பிடத் தக்கமைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ஆண்டுக்கு 90 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட இந்த சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோலிய ரசாயன வளாகம் ஹிந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனம் மற்றும் ராஜஸ்தான் மாநில அரசின் கூட்டுறவில் மேம்படுத்தப்பட்டதாகும்.
- இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், பெட்ரோலியரசாயன தற்சார்பை விரிவுபடுத்துவதிலும், தொழிலக வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் இத்திட்டம் முக்கியப் பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மேலும், பச்பத்ரா பகுதியில் ஒரு பெட்ரோலிய ரசாயன மற்றும் பிளாஸ்டிக் ஆலையை உருவாக்குவதற்கும், இத்திட்டம் முக்கியப் பங்கு வகிக்கும் என்பதோடு, சார்பு தொழில்களையும், துணைத் துறைகளையும் ஊக்கு விக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அரசு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

2. ஜப்பானின் வடக்கு கடற்கரை பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

(i) சான்ரிக்கு கடற்கரைக்கு அப்பால் சுமார் 19 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் சுமார் 7.7 அலகுகளாகப் பதிவானது. தொடர்ந்து, இதைத் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

(ii) முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, ஹொக்கைடோ முதல் புகுஷிமா வரை உள்ள 5 மாகாணங்களில் வசிக்கும் சுமார் 1.8 லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டனர்.

(iii) சுனாமி எச்சரிக்கை சில மணி நேரங்களுக்குப் பிறகு முழுமையாகத் திரும்பப் பெறப்பட்டது. இருப்பினும், ஜப்பான் வானிலை ஆய்வு மையம் மற்றும் அமைச்சரவை அலுவலகம் இணைந்து, அடுத்த ஒரு வாரத்துக்குள் ஒரு 'மெகா நில நடுக்கம்' ஏற்பட 1 சதவீத வாய்ப்புள்ளதாக எச்சரித்தது. சாதாரண காலங்களில் இதற்கான வாய்ப்பு 0.1 சதவீதமாக மட்டுமே இருக்கும் நிலையில், தற்போது அந்த அபாயம் பத்து மடங்கு அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(iv) ஜப்பான் பிரதமர் சனே தகாய்ச்சி இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், 'பொதுமக்கள் தங்களின் அவசர கால உணவுப் பொருள்கள் மற்றும் வெளியேற்றப் பாதைகளைச் சரிபார்த்துக் கொள்ளவும். அவசர காலங்களில் அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும்' என்றார்.

(v) திங்கள்கிழமை நிலநடுக்கத்தால் நிலத்தடி ரயில் மற்றும் ஷின்கான்சென் புல்லட் ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. ஆயிரக்கணக்கான பயணிகள் ரயில் நிலையங்களில் ஸ்தம்பித்தனர்.

(vi) நிலநடுக்கத்தின் தாக்கத்தால் ஆமோரி, இவாடே மாகாணங்களில் இருவர் காயமடைந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிருஷ்டவசமாக, இப்பகுதியில் உள்ள அணுமின் நிலையங்களில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

(vii) ஜப்பானில் ஆண்நிலநடுக்காக தொடர் கதையாகி வருகின்றன. கடந்த டிசம்பரில், ரிக்டரில் 7.5 அலகுகளாகப் பதிவான நிலநடுக்கத்தின் போதும் இதேபோன்ற மெகா நிலநடுக்க எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

(viii) கடந்த 2011, மார்ச் மாதம் ஏற்பட்ட மெகா நிலநடுக்கமும், அதைத் தொடர்ந்து உண்டான சுனாமியும் சுமார் 22,000 உயிரிழப்புகளை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

3. தென்கிழக்கு ஐரோப்பிய நாடான பல்கேரியாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், அந்நாட்டு முன்னாள் அதிபரும், ரஷிய ஆதரவாளருமான ரூமென் ராதேவ் அமோக வெற்றி பெற்றுள்ளார்.

(i) ஐரோப்பிய யூனியன் மற்றும் 'நேட்டோ' கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடான பல்கேரியாவில், ஆட்சியில் இருந்த மத்திய-வலதுசாரி அரசுக்கு எதிராக, கடந்த ஆண்டு டிசம்பரில் மிகப்பெரிய ஊழல் எதிர்ப்புப் போராட்டங்கள் வெடித்தன.

(ii) இப்போராட்டங்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்து வந்த அதிபர் ரூமென் ராதேவ், கடந்த ஜனவரியில் தனது பதவியில் இருந்து விலகினார். பின்னர், 'புரோக்ரசிவ் பல்கேரியா' எனும் புதிய அரசியல் கட்சி ஒன்றை தொடங்கி, இத்தேர்தலில் களம் கண்டார்; சுமார் 43.91 சதவீத வாக்குகளைப் பெற்று, தற்போது ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார்.

(iii) 2021 முதல் கடந்த 5 ஆண்டுகளில் 8-ஆவது முறையாக இந்நாட்டில் தேர்தல் நடைபெற்றுள்ளது. பல ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்தி வந்த முன்னாள் பிரதமர் போய்கோ போரி சோவின் ஜிஇஆர்பி கட்சி 13. சதவீத வாக்குகளையும், ஐரோப்பிய ஆதரவு நிலைப்பாடு கொண்ட பிபி-டிபி கூட்டணி 12.6 சதவீத வாக்குகளையும் பெற்று தோல்வி அடைந்துள்ளன.

(iv) பல்கேரியாவின் முன்னாள் விமானப் படை அதிகாரியான ரூமென் ராதேவ், உக்ரைனுக்கு ராணுவ உதவி வழங்குவதைக் கடுமையாக எதிர்த்து வருபவர். ரஷியாவிடம் இருந்து தடையின்றி எண்ணெய் மற்றும் எரிவாயு பெறுவதற்கும், அந்நாட்டுடனான உறவை மேம்படுத்துவதற்கும் இவர் முக்கியத்துவம் அளித்து வருகிறார். அதேநேரம்,

இவரின் வெற்றிக்கு ஐரோப்பிய யூனியன், ரஷியா ஆகிய இரு தரப்பிலும் வரவேற்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. நாட்டின் 8 உள்கட்டமைப்புத் துறைகளின் உற்பத்தி கடந்த மார்ச் மாதத்தில் 0.4 சதவீத சரிவைக் கண்டுள்ளது. இது கடந்த 19 மாதங்களில் காணப்படாத வீழ்ச்சியாகும்.

(i) மத்திய அரசு வெளியிட்ட தரவுகளின்படி, நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்கு முக்கியத் தூண்களாக விளங்கும் நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, சுத்திகரிப்புத் தயாரிப்புகள், உரங்கள், எஃகு, சிமெண்ட், மின்சாரம் ஆகிய 8 துறைகளின் ஒட்டு மொத்த உற்பத்தி வளர்ச்சி கடந்த பிப்ரவரியில் 2.3 சதவீதமாக இருந்த நிலையில், மார்ச் மாதத்தில் எதிர்மறை நிலைக்குச் சென்றிருப்பது பொருளாதார வட்டாரத்தில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

(ii) இந்தத் திடீர் சரிவுக்கு முக்கியக் காரணமாக கச்சா எண்ணெய் உற்பத்தி வீழ்ச்சி பார்க்கப்படுகிறது. முந்தைய 2025 மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டு கச்சா எண்ணெய் உற்பத்தி 5.7 சதவீதம் சரிந்துள்ளது.

(iii) உர உற்பத்தி பிப்ரவரியின் 3.4 சதவீத வளர்ச்சியிலிருந்து மார்ச்சில் அதிரடியாக 24.6 சதவீதம் சரிந்துள்ளது. இதேபோல், நிலக்கரி துறையும் பின்னடைவைச்சந்தித்துள்ளது. பிப்ரவரியில் 2.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த நிலக்கரி உற்பத்தி, மார்ச்சில் 4 சதவீத வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

(iv) சிமெண்ட் உற்பத்தி 4 சதவீதம் அதிகரித்திருந்தாலும், முந்தைய மாதத்தின் 9.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது தொய்வைக் காட்டுகிறது. எஃகு உற்பத்தி 2.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

(v) நாட்டின் ஒட்டுமொத்த தொழில்துறை உற்பத்தி குறியீட்டில் (ஐஐபி) சுமார் 40 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள இந்த 8 முக்கிய துறைகளில், முக்கியத்துவம் வாய்ந்த பெட்ரோலிய சுத்திகரிப்புத் துறை 0.1 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. பிப்ரவரி மாதத்தில் இத்துறை ஒரு சதவீத சரிவைச் சந்தித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(vi) உள்கட்டமைப்புத் துறைகள் தடுமாறினாலும், உற்பத்தித் துறையின் எழுச்சியால் பிப்ரவரி மாதத்துக்கான ஒட்டுமொத்தத் தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி (ஐஐபி) 5.2 சதவீதமாக உயர்ந்தது.

(vii) உற்பத்தித் துறை 6 சதவீத வளர்ச்சியை எட்டியதன் மூலம் 5 மின்சார உற்பத்தியில் ஏற்பட்ட சரிவை ஓரளவு ஈடுசெய்ய முடிந்தது. ஆனால் தற்போது மார்ச் மாதத்தில், உள்கட்டமைப்புத் துறைகளின் சரிவால் தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி (ஐஐபி) 1 முதல் 2 சதவீதமாக சரியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(viii) 2025–26 நிதியாண்டில் 8 முன்னணி உள்கட்டமைப்புத் துறைகளின் உற்பத்தி வளர்ச்சி விகிதம் 2.6 சதவீதமாக பதிவாகியுள்ளது. கடந்த நிதியாண்டின் 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இது மிதமான வளர்ச்சியாகக் கருதப்படுகிறது.

5. ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி, எகிப்தின் கெய்ரோ நகரில் செவ்வாய்க்கிழமை (ஏப்.21) தொடங்குகிறது. இந்தியாவிலிருந்து 71 பேர் கொண்ட அணி களம் காண்கிறது.

6. இத்தாலியில் நடைபெற்ற உலக சீரிஸ் கார்டிங் பந்தயத்தில், தனது வயது பிரிவு ரேஸ் 1-இல் இந்தியாவின் அட்டிகா மிர் (11) இரண்டாம் இடம் பிடித்து அசத்தினார்.

7. இந்தியாவில் 3,000 ரஷிய ராணுவ வீரர்கள், 5 ரஷிய போர்க் கப்பல்கள், 10 போர் விமானங்கள் 5 ஆண்டு காலம் நிலைநிறுத்தப்படுவது தொடர்பான ஒப்பந்தம் அமலுக்கு வந்துள்ளது.

(i) இந்தியா-ரஷியா இடையே பரஸ்பர தளவாட பரிமாற்ற ஒப்பந்தம் (ரெலோஸ்) ரஷிய தலைநகர் மாஸ்கோவில் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் கையொப்பமானது. இந்த ஒப்பந்தம் தற்போது அமலுக்கு வந்துள்ளது.

(ii) இந்த ஒப்பந்தத்தின்படி, இந்தியாவில் 5 ஆண்டுகாலம் வரை 3,000 ரஷிய ராணுவ வீரர்கள் தங்கியிருப்பர். 5 ரஷிய போர்க் கப்பல்கள், 10 ரஷிய போர் விமானங்கள் நிலைநிறுத்தப்படும். இது அமைதி காலம், யுத்த காலத்துக்கும் பொருந்தும்.

(iii) இதேபோல், ரஷியாவிலும் இந்திய ராணுவ வீரர்கள் 3,000 பேர் தங்கியிருப்பர். 5 இந்திய போர்க் கப்பல்களும், 10 இந்திய போர் விமானங்களும் 5 ஆண்டு காலம் நிலைநிறுத்தப்படும். 2 நாடுகளும் தத்தமது ராணுவத் தளங்கள், கடற்படைத் தளங்கள், விமான தளங்களை பிறநாடுகள் பயன்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(iv) இந்தியாவும், ரஷியாவும் விரும்பினால், இந்த 5 ஆண்டு காலத்தை மேலும் 5 ஆண்டு காலம் நீட்டித்துக்கொள்ளவும் ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(v) இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம், இந்தியா-ரஷியா இடையே ராணுவரீதியான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதும், தளவாட பரிமாற்றத்தை அதிகரிப்பதுமே ஆகும். இந்த ஒப்பந்தம், உலகளாவிய அளவில் தற்போது அதிக கவனம் ஈர்த்துவரும் பிரதேசமான ஆர்டிக் பிரதேசத்தில் இந்தியா தனது செல்வாக்கை விரிவுபடுத்த உதவும். அதேபோல் ரஷியாவுக்கு அதன் போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புதல், உதிரிபாகங்கள் பெறுதல், பழுதை சரிசெய்தல் போன்ற பணிகளுக்கு உதவும். மேலும், இந்திய பெருங்கடல் பிரதேசத்தில் வரும் அதன் போர்க் கப்பல்கள், வர்த்தக கப்பல்களுக்குத் தேவையான உதவிகளைப் பெறவும் உதவும்.

(vi) ஏற்கெனவே இதேபோன்ற ஒப்பந்தத்தை (லெமோவா) அமெரிக்காவுடனும் இந்தியா செய்துள்ளது. ஆனால், அந்த ஒப்பந்தத்தில் இந்தியாவில் அமெரிக்க வீரர்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட வழிவகை செய்யப்படவில்லை. அதே போல் அமெரிக்காவிலும் இந்திய வீரர்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட வழிவகை செய்யப்பட வில்லை.

(vii) இந்தியாவின் நீண்டகால நெருங்கிய நட்பு நாடாகவும், சர்வதேச அளவில் நம்பகமான கூட்டாளி நாடாகவும் ரஷியா திகழ்வதால் அந்நாட்டுக்கு மட்டும் வீரர்கள், போர் விமானங்கள், போர்க் கப்பல்களை நிறுத்த அனுமதி தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

8. இரு நாடுகளிடையேயான பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தையைத் தொடங்க இந்தியாவும், தென்கொரியாவும் திங்கள்கிழமை ஒப்புக்கொண்டன.

(i) புவிசார் அரசியல் பதற்றம் காரணமாக வர்த்தகத்தில் இடையூறுகள் அதிகரித்துவரும் சூழலில்,பிரதமர் நரேந்திர மோடி-தென்கொ ரிய அதிபர் லீ ஜா மியூங் இடையேயான பேச்சுவார்த்தைக்குப் பிறகு இரு நாடுகள் தரப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(ii) தென்கொரிய அதிபருடனான ஆலோசனைக்குப் பிறகு பிரதமர் வெளியிட்ட பதிவில், ‘இந்த ஆலோசனையைத் தொடர்ந்து, இரு நாடுகளிடையேயான நம்பகமான கூட்டுறவை எதிர்காலம் சார்ந்த கூட்டுறவாக மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

(iii) கடந்த 2010-ஆம் ஆண்டில் இரு நாடுகளிடையே விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் (சிஇபிஏ) மேற்கொள்ளப்பட்ட பிறகு, இருதரப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் வேகம் பெற்றன.

(iv) கணினி சிப்கள் முதல், கப்பல்கள் வரை மற்றும் அறிவுசார் நிபுணர்கள் முதல் தொழில்நுட்பம் வரை, சுற்றுச்சூழல் முதல் எரி சக்தி வரை என ஒவ்வொரு துறையிலும் ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகள் இருதரப்புக்கும் உருவாகின. ஒருங்கிணைந்த இந்திய-பிசிபிக் பிராந்திய அமைதி மற்றும் மேம்பாட்டிலும் இரு நாடுகளும் தொடர்ந்து பங்களிப்பாற்றும்.

(v) இருதரப்பு வர்த்தகம், முதலீடுகள், செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர், முக்கிய மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் மற்றும் மக்களுக்கு இடையேயான உறவுகள் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவை மேலும் விரிவுபடுத்துவது குறித்தும் இந்தப் பேச்சுவார்த்தையில் ஆலோசிக்கப்பட்டது' என்று குறிப்பிட்டார்.

(vi) இருதரப்பு பேச்சுவார்த்தை குறித்து மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சக் பியூஷ் கோயல் கூறியதாவது:

- இந்தியா- கொரியா இடையேயான விரிவான பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தை மேம்படுத்தவும், பணியை மீண்டும் தொடங்கவும் அதைப் புதுப்பிக்கவும் உரிய வழிகள் குறித்து இருதரப்பில் ஆலோசிக்கப்பட்டது.
- தொழிலக ஒத்துழைப்பு, பசுமை எரிசக்தி, எண்ம வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இரு நாடுகளிடையேயான விரிவான பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தை மேம்படுத்துவது தொடர்பாக இதுவரை 10 சுற்று பேச்சுவார்த்தை நிறைவடைந்துள்ளது.

(vii) தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்:

- கொரிய அதிபருடன் இந்தியா வந்துள்ள அந்நாட்டு வர்த்தக அமைச்சர் யோ ஹன்-கூ உடனான பேச்சுவார்த்தையின் போது, இரு நாடுகளிடையேயான வர்த்தக உறவை சமகாலத்துக்கு ஏற்றதாகவும், வர்த்தகப் பற்றாக்குறை குறித்த கவலைகளைக் களையவும் புதிதாக இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து பரிசீலிக்குமாறு கொரியாவிடம் வலியுறுத்தப்பட்டது.
- இரு நாடுகளிடையே மிகவும் சமச்சீரான வர்த்தக உறவை உறுதி செய்வதோடு, தற்போதைய ரூ.2.5 லட்சம் கோடி (27 பில்லியன் டாலர்) மதிப்பிலான இருதரப்பு வர்த்தகத்தை வரும் 2030-இல் ரூ. 5 லட்சம் கோடி (54 பில்லியன் டாலர்) மதிப்பிலான வர்த்தகமாக உயர்த்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

(viii) இந்தியாவில் கொரியப் பகுதி...

- நவீன தொழில்நுட்பம் உள்ளிட்ட மேலும் சில துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.
- குறிப்பாக ஜப்பானிய நகரமைப்பு பாணியில் இந்தியாவில் கொரியப் பகுதியை அமைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இந்தப் பகுதியில் பள்ளிகள், கல்லூரிகள், ஹோட்டல்கள், உணவகங்கள் மட்டுமின்றி, தொழிற்சாலைகளுக்கும் உடனடியாகப் பயன்படுத்தக்கூடிய உள்கட்டமைப்பு வசதிகள் இடம்பெறும். இது மூலதன முதலீட்டை அதிக அளவில் ஈர்க்கும் என நம்பப்படுகிறது.
- இருநாடுகளின் தனியார் துறை களிடையேயும் இந்தப் பேச்சு வார்த்தையின்போது

பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின என்றார்.

9. சைப்ரஸில் நடைபெற்ற 'கேண்டிடேட்ஸ் சதுரங்கப் போட்டியில்' (Candidates Chess Tournament) வெற்றி பெற்ற, சென்னையைச் சேர்ந்த 24 வயது சதுரங்க வீராங்கனை ஆர். வைஷாலியின் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை.

(i) இந்த விறுவிறுப்பான வெற்றியின் கண்ணோட்டம்

- ஏப்ரல் 15, 2026 அன்று வைஷாலி இப்பட்டத்தை வென்றார். இதன் மூலம், 1952-ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் கேண்டிடேட்ஸ் போட்டியின் வரலாற்றிலேயே, இக்கோப்பையை வென்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமையை அவர் பெற்றார்.
- இப்போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம், தற்போதைய உலக மகளிர் சதுரங்க சாம்பியனான சீனாவின் 'ஜூ வென்ஜூனை' (Ju Wenjun) உலக சாம்பியன் பட்டத்திற்காக எதிர்கொண்டு போட்டியிடும் உரிமையை அவர் பெற்றுள்ளார்.
- வைஷாலி 14 சுற்றுகளைக் கொண்ட இப்போட்டியைத் தொடக்கத்தில் சாதகமாகத் தொடங்காததால், இவ்வெற்றி 'விறுவிறுப்பானது' (dramatic) என்று வர்ணிக்கப்பட்டது; அவர் தனது முதல் நான்கு ஆட்டங்களைச் சமனில் முடித்தார், ஐந்தாவது ஆட்டத்தில் தோல்வியடைந்தார்.

(ii) இந்தியா சார்ந்த தகவல்கள்

- கோனேரு ஹம்பி மற்றும் ஹரிகா துரோணவல்லி ஆகியோரின் வரிசையில், 'கிராண்ட்மாஸ்டர்' (GM) பட்டத்தை வென்ற மூன்றாவது இந்தியப் பெண் வைஷாலி ஆவார்.
- கேண்டிடேட்ஸ் போட்டியில் இதற்கு முன் இந்தியப் பெண்கள் சாதித்ததில், 2024-ஆம் ஆண்டில் கோனேரு ஹம்பி இரண்டாம் இடத்தைப் பிடித்திருந்தார்; ஆனால், முதலிடத்தைப் பிடித்த முதல் இந்தியப் பெண் வைஷாலி மட்டுமே ஆவார்.
- ஐந்து முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற விஸ்வநாதன் ஆனந்தால் நிறுவப்பட்ட 'வெஸ்ட் பிரிட்ஜ் ஆனந்த் சதுரங்க அகாடமியில்' (WestBridge Anand Chess Academy) இவர் பயிற்சி பெற்றார்
- கடந்தகாலச் சாதனைகள்:
- இவர் இரண்டு முறை 'உலக இளையோர் சாம்பியன்' (12 வயது மற்றும் 14 வயதுக்குட்பட்டோர் பிரிவுகள்) பட்டம் வென்றுள்ளார்.
- 2022-ஆம் ஆண்டு மாமல்லபுரத்தில் நடைபெற்ற சதுரங்க ஒலிம்பியாட் போட்டியில், தனிநபர் மற்றும் அணிகள் பிரிவுகளில் வெண்கலப் பதக்கங்களை வென்றார்.
- 2024-ஆம் ஆண்டு நடைபெற்ற சதுரங்க ஒலிம்பியாட் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியில் இவரும் ஒரு அங்கமாகத் திகழ்ந்தார்.

(iii) உலகம் சார்ந்த தகவல்கள்

- உயர்மட்டப் போட்டி: வைஷாலி பின்வரும் எட்டு உயர்மட்ட வீராங்கனைகளைக் கொண்ட குழுவுடன் போட்டியிட்டார்:
- அன்னா முசிசுக் (உக்ரைன்): முன்னாள் உலக 'பிளிட்ஸ்' (Blitz) மற்றும் 'ரேபிட்' (Rapid) சதுரங்க சாம்பியன்.
- டான் ஜாங்கியி (சீனா): 2024-ஆம் ஆண்டு கேண்டிடேட்ஸ் போட்டியின் வெற்றியாளர்.
- அலெக்ஸாண்ட்ரா கோர்யாச்கினா (ரஷ்யா): 2019-ஆம் ஆண்டு கேண்டிடேட்ஸ் போட்டியின் வெற்றியாளர்.

உலகத் தரவரிசை: இப்போட்டி தொடங்குவதற்கு முன்பு, பங்கேற்ற எட்டு வீராங்கனைகளில் வைஷாலி தரவரிசையில் கடைசி இடத்தில் இருந்தார்; எனவே, அவரது இந்த வெற்றி உலக சதுரங்கச் சமூகத்திற்கு ஒரு எதிர்பாராத ஆச்சரியமாக (upset) அமைந்தது.

(iv) இந்தியாவின் தற்போதைய சதுரங்கக் காலத்தின் ஒரு பகுப்பாய்வு (2024–2026)

- செப்டம்பர் 2024-இல் புடாபெஸ்டில் நடைபெற்ற சதுரங்க ஒலிம்பியாட் போட்டியில், 'பொதுப் பிரிவு' (Open) மற்றும் 'பெண்கள் பிரிவு' ஆகிய இரண்டிலும் அணி தங்கப் பதக்கங்களை வென்று இந்தியா வரலாற்றுச் சாதனை படைத்தது. அதே ஒலிம்பியாட் போட்டியில், இந்திய வீரர்களான குகேஷ், அர்ஜுன் எரிகைசி, திவ்யா தேஷ்முக் மற்றும் வந்திகா அகர்வால் ஆகியோர் தனிநபர் தங்கப் பதக்கங்களையும் வென்றனர்.
- டிசம்பர் 2024-இல், 18 வயதான டி. குகேஷ் சிங்கப்பூரில் நடைபெற்ற போட்டியில் உலக சதுரங்க சாம்பியன் ஆனார்.
- ஜூலை 2025-இல் ஜார்ஜியாவில் நடைபெற்ற பெண்கள் உலகக் கோப்பையை திவ்யா தேஷ்முக் வென்றார்; மேலும் டிசம்பர் 2024-இல் நியூயார்க்கில் நடைபெற்ற போட்டியில் கோனேரு ஹம்பி உலக 'ரேபிட்' (Rapid) சாம்பியன் பட்டத்தை வென்றார்.

தற்போது குகேஷ் 'பொதுப் பிரிவு' உலக சாம்பியன் பட்டத்தைத் தன்வசம் வைத்துள்ள நிலையிலும், வைஷாலி 'பெண்கள் பிரிவு' உலக சாம்பியன் பட்டத்திற்காகப் போட்டியிட்டு வரும் நிலையிலும், உலக சதுரங்க அரங்கில் இந்தியா தன்னை ஒரு முன்னணி வல்லரசாகத் திடமாக நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.